**பாதஹேவாஹெட்ட பிரதேச சபை**
**கண்டி மாவட்டம்**

-----------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை 2020 மே 19 மற்றும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஜுன் 30 ஆம் திகதியும் தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக் கூற்றுகளின் 2019 திசெம்பர் 31 இல் பாதஹேவாஹட்ட பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீடு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 863,024 ஆன களஞ்சிய பொருட்கள் விநியோகம் இரு முறை கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | 2020 ஆண்டில் சரி செய்கிறேன். |
| (ஆ) | முன்னைய ஆண்டு குறைத்து இனங்காணப்பட்ட கூட்டுத் தொகை ரூபா 212,751 ஆன கடன்படுனர் மற்றும் கடன்கொடுனர் மீதிகள் மீளாய்வாண்டில் கொடுக்கல் வாங்கலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | எதிர் காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

| | | |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் 05 கணக்கு விடய மீதிகள் மற்றும் துணை பதிவேடுகளிற்கிடையில் ரூபா 782, 849 ஆன இணங்காமை நிலவியது. | வித்திதயாசத்தை இனங்கண்டு சீர் செய்ய வேண்டும். | 2020 ஆண்டின் போது குறித்த இணக்காமையை சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

### 1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) பெற வேண்டிய கணக்குகள்** | | |
| 05 ஆண்டுகளை விஞ்சியிருந்த பெற வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 498,035 மற்றும் 01 ஆண்டிற்கும் 05 ஆண்டுகளிற்கும் இடையிலான காலத்தை விஞ்சியிருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 1,608,326 ஆனது. | பெற வேண்டிய பணத்தை அறவிட வேண்டும் | எதிர் காலத்தில் குறித்த நிறுவனங்கள் மற்றும் தனி நபர்களை அறிவூட்டி, அறவிடுகிறேன். |
| **(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்** | | |
| ஆண்டு 01 இற்கும் 05 இற்கும் இடையிலான காலத்தினுள் செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 376,905 ஆனது. | கொடுப்பனவுகளை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் | எதிர் காலத்தில் குறித்த தொகையை கொடுத்துத் தீர்க்கிறேன். |

### 1.3.4 கணக்காய்விற்கு தேவையான எழுத்து மூல சான்றுகளின்மை

தகவல்கள் சமர்பிக்கப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 18,640,902 ஆன 03 கணக்கு விடயங்களிற்கான உறுதி, ஒப்படை கட்டளை, கோவைகள் மற்றும் துணை பதிவேடுகள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படவில்லை. | நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்படும் மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகளை சமர்பிக்க வேண்டும். | 2020 ஆண்டில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

**1.3.5 இணங்காமை**

**1.3.5.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்தவ தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதிக் கோவை | | | |
| 218 விதி | காணி மற்றும் கட்டிடங்கள் ஆண்டிற்கு ஒரு முறை பரீட்சிக்கப்பட்டிருக்க வில்லை. | குறித்த விதி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 ஆண்டில் ஆய்வொன்றை மேற்கொண்டு அறிக்கை தயாரிக்கிறேன். |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் | | | |
| நி.பி. 571 | காலாவதியான 16 கருத்திட்டங்களிற்கு உரிய ரூபா 213,548 ஆன வைப்புக்கள் வருமானத்திற்கு செலவு வைக்க அல்லது மீள் செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | அரச வருமானத்திற்கு செலவு வைக்க எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கிறேன். |
| (இ) 2016 மார்ச் 17 திகதிய மத்திய மாகாண, உள்ளூராட்சி ஆணையாளரின் 2016/03 இலக்க சுற்றறிக்கையின் 06 பிரிவு | தெல்தொட்டை பொதுச் சந்தையின் 46 கடையறைகளிற்கு புதிய மதிப்பீட்டின் படி உடன்படிக்கை கைச்சாத்திட்டிருக்கவில்லை. | குறித்த சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | புதிய மதிப்பீட்டின் படி எதிர் காலத்தில் உடன்படிக்கை கைச்சாத்திட நடவடிக்கை எடுக்கிறேன். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 29,451,639ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 32,598,203 ஆனது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | சிட்டையிட ப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீத வரி மற்றும் குத்தகை | 2,445,247 | 2,227,999 | 2.523,912 | 6,405,182 | 2,457,319 | 2,257,124 | 2,248,475 | 6,484,677 |
| (ii) | வாடகை | 7,573,083 | 4,860,666 | 4,672,308 | 1,185,400 | 4,102,089 | 3,441,900 | 3,733,878 | 702,776 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 3,357,500 | 1,487,010 | 1,487,010 | ---- | 4,131,325 | 2,907,999 | 2,577,599 | 2,369,700 |
| (iv) | ஏனைய வருமானம | 64,744,379 | 52,188,729 | 48,450,230 | 100,771,385 | 36,927,188 | 41,463,018 | 13,904,751 | 84,234,185 |
| | கூட்டுத் தொகை | 78,120,209 | 60,764,404 | 57,133,460 | 108,361,967 | 47,617,921 | 50,070,041 | 22,464,703 | 93,791,338 |
| | | ======= | ======= | ======= | ======= | ======= | ======= | ======= | ======= |

### 2.2.2 வீதவரி மற்றும் வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) ஏக்கர் வரி** | | |
| மீளாய்வாண்டு இறுதியில் அறவிட வேண்டிய ரூபா 1,308,243 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை தொகை அறவிடப்பட வேண்டும். | ஆய்வொன்றை மேற்கொண்டு ஏக்கர் வரி பதிவேட்டை நாளாதுவரையாக்கி முன் ஏற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். |
| **(ஆ) நீர் வரி** | | |
| மீளாய்வாண்டு இறுதியில் அறவிட வேண்டிய ரூபா 14,135,496 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை தொகை அறவிடப்பட வேண்டும். | 2019 ஆண்டு நடமாடும் சேவை மற்றும் விநியோக துண்டிப்பு மூலம் கட்டணம் அறவிடப்பட்டதுடன், எதிர் காலத்தில் நிலுவை கட்டணம் அறவிடுகிறேன். |

### 2.2.3 வாடகை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கலஹா பொதுச் சந்தை கடைகளிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 219,240 ஆன வாடகை அறவிடப்படவில்லை. | உடன்படிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | சட்ட நடவடிக்கை எடுக்க அங்கீகாரம் கிடைத்துள்ளதால், எதிர் காலத்தில் அதற்காக நடவடிக்கை எடுக்கிறேன். |

### 2.2.4 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 திதிக்கு பெற வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 2,126,449 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 49,948,502 ஆனது. | பெற வேண்டிய தொகையை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர் காலத்தில் பதிவேடுகளை தயாரித்து பணம் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்கள் நலன், இலகு மற்றும் நலன்புரிச் சேவைகள் போன்ற சபையினால் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

(அ) ஒதிக்கீடு பயன்படுத்தப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் 05 செலவு விடயங்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 5,405,000 ஆன ஒதுக்கீடு பயன்படுத்தப்படவில்லை. | ஒதுக்கீடு குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

(ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| | | |
|---|---|---|
| சபையினால் அதிகார பிரதேசத்தில் பொது மக்களிற்காக பல தரப்பட்ட வேலைகள் செயற்படுத்தப்பட்ட போதும், அவைகள் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களுடன் எவ்வாறு பொருந்துகின்றன, என்பது தொடர்பாக மதிப்பீடொன்று மற்றும் பின்னூட்டல் செயற்பாடொன்றும் செய்யப்பட்டிருக்கவில்லை. | பின்னூட்டல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | 2020 ஆண்டில் இலக்கு மயப்படுத்தப்பட்ட வேலைத் திட்டத்தை செயற்படுத்த நடவடிக்கை எடுக்கிறேன். |

### 3.2 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஊழியர் வெற்றிடம் மற்றும் மிகை | | |
| மீளாய்வாண்டு இறுதியன்று அங்கீகரிக்கப்பட்ட ஆளணியினுள் 17 வெற்றிடங்கள் நிலவின. | வெற்றிடங்களை நிரப்ப வேண்டும். | ஆட்சேர்ப்பு இடை நிருத்தப்பட்டுள்ளதால், வெற்றிடம் தொடர்ந்து நிலவுகின்றது. |

### 3.3 செயற்பாட்டு வினைதிறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆதனங்களை குத்தகைக்கு வழங்குவது தொடர்பான குறைபாடுகள் | | |
| | சரியான குத்தகை உடன்படிக்கையின்றி 16 கடையறைகள் குத்தகைக்கு வழங்கப்படடிருந்தன. | குத்தகை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட வேண்டும். | குத்தகை உடன்படிக்கை தயாரிக்க தேவையான நடவடிக்கைகளை எதிர் காலத்தில் செய்கிறேன். |
| (ஆ) | கலஹா மற்றும் தலாத்துஓய எனும் பிரதேசங்களில் அமைந்துள்ள 28 கடையறைகள் 2008 ஆண்டின் பின்னர் மதிப்பீடு செய்யப்படவில்லை. | புதிய மதிப்பீடு பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். | மதிப்பீடு செய்ய உத்தியோகத்தர்கள் சமுகமளித்து தகவல்களை பெற்றுக் கொண்டதுடன், இது வரை மதிப்பீட்டு அறிக்கை கிடைக்கவில்லை. |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.4.1 சொத்துக்கள் பதிவேட்டிற்கு உட்படுத்தப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 13 சனசமூக நிலையங்கள், 64 சுடுகாடுகள் மற்றும் 05 மலசல கூடங்களின் உரிமை, பெறுமதி மற்றும் அளவுகளை உறுதி செய்து நிலையான சொத்து பதிவேட்டிற்கு உட்படுத்தியிருக்கவில்லை. | நிலையான சொத்துக்கள் பதிவேட்டிற்கு உட்படுத்தப்பட வேண்டும். | எதிர் காலத்தில் உரிமை, பெறுமதி மற்றும் அளவுகளை உறுதி செய்து கொண்டு பதிவேட்டிற்கு உட்படுத்துகிறேன். |

#### 3.4.2 சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 22 அலகு காணி மற்றும் கட்டிடங்களின் சரியான உரிமையை உறுதி செய்து கொண்டிருக்கவில்லை | சொத்துக்களின் உரிமையை உறுதி செய்து கொள்ள வேண்டும் | வரிபடம் மற்றும் உறுதி தயாரிப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | 07 குடிநீர் உத்தேச திட்டங்களின் உரிமையை மற்றும் பெறுமதியை சரியாக உறுதி செய்திருக்கவில்லை. | சொத்துக்களின் உரிமையை உறுதி செய்து கொள்ள வேண்டும் | எதிர் காலத்தில் உரிமையை உறுதி செய்து பெறுமதியை இனங்காண நடவடிக்கை எடுக்கிறேன். |

### 3.4.3 விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டுச் சொத்தக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 627,819 பெறுமதியான 13 வகையான நிலையான சொத்துக்கள் விளைவற்று நிலவின. | சொத்துக்களிலிருந்து உச்ச பயன்பாட்டை பெற்றுக் கொள்ள வேண்டும் | பண்டக கணிப்பீட்டு சவையினால் திறந்த ஏலத்தில் விற்க அல்லது பொருத்தமான நடவடிக்கை எடுக்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. |

### 3.5 வாகன பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2015 ஆண்டு அன்பளிப்பாக கிடைத்த ரூபா 17,469,179 பெறுமதியான போட்டோன் லோவல் பெக்கோ இயந்திரம் 93 மணித்தியாலங்கள் மாத்திரம் செலுத்தப்பட்டிருந்த போதும், பராமரிப்பு வேலைகளிற்காக ரூபா 905,451 செலவிடப்பட்டிருந்தது. | சொத்துக்களிலிருந்து உச்ச பயன்பாட்டை பெற்றுக் கொள்ள வேண்டும் | பெக்கோ இயந்திரத்தின் மூலம் தற்போது வருமானம் ஈட்டுகிறேன். |

### 3.6 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான பெகோ இயந்திரம் விளைவற்று இருக்கையில், பெக்கோ இயந்திரமொன்றை வாடகைக்கு பெற்றுக் கொள்ள இயந்திர மணித்தியாலத்திற்கு ரூபா 2,700 வீதம் ரூபா 217,080 செலுத்தப்பட்டிருந்தது. | தேவைப்பட்டால் மாத்திரம் சேவையை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

### 3.7 பெறுகைகள்

### 3.7.1 பெறுகைகள் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஆண்டினுள் ரூபா 25,230,941 ஆன மூலதன செலவினை சபை மேற்கொண்டுள்ள போதும், பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்க வேண்டும். | 2020 ஆண்டில் பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கிறேன். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 தீர்க்கப்படாத அவதானங்களும் பதில் கிடைக்காத கணக்காய்வு ஐயவினாக்களும்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 – 3.2(அ) | | |
| | சபை செயற்படுத்தும் உடுவெள, காவல் அறை மற்றும் கொலம்பிஸ்ச நீர் திட்டங்களில் 280 நீர் மாணிகள் செயலிழந்து இருந்ததனால், சரியான நீர் கட்டணத்தை அறவிட இயலாதிருந்தது. | நீர் கட்டணம் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும் | சுத்திகரிப்பு தாங்கி நிர்மாணித்து எதிர் காலத்தில் நீர் மாணி பொருத்த நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | 2018 – 3.3(ஆ) | | |
| | கண்டி மாநகர சபைக்கு இடம் மாறிச் சென்ற உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 160,854 ஆன கடன் மீதி அறிவிடப்படவில்லை. | கடன் மீதியை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும் | அறவிடுதல் தொடர்பாக குறித்த நிறுவனம் அறிவூட்டப்பட்டுள்ளது |
| (இ) | 2018 – 3.4(ஈ) | | |
| | 1994 – 2012 காலப் பகுதியினுள் குத்தகைக்கு வழங்கிய 64 கடையறைகளின் குத்தகை உடன்படிக்கைகளை புதிப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குத்தகை உடன்படிக்கைகளை புதுப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் | எதிர் காலத்தில் குத்தகை உடன்படிக்கைகளை புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கிறேன் |
| (ஈ) | 2018 – 3.5.2(அ) | | |
| | சபைக்கு சொந்தமான 08 நீர் உத்தேச திட்டங்களில் 2547 பாவனையாளர் அலகுகளிலிருந்து மாணியின்றி நிலையான நீர் கட்டணம் மாத்திரம் அறவிடப்பட்டுள்ளது | மாணிகளை பொருத்தி சரியான நீர் கட்டணம் அறவிடப்பட வேண்டும் | எதிர் காலத்தில் சுத்திகரிப்பு தாங்கி மற்றும் நீர் மாணி பெற்றுக் கொண்டு கட்டணம் அறவிடுகிறேன் |

(உ) 2018 – 3.5.3

---------------------------

| | | |
|---|---|---|
| சபையினால் பிரிக்கப்பட்ட 06 காணிகளிலிருந்து பெற்றுக் கொண்ட காணித் துண்டிற்குரிய உறுதியை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவில்லை | உறுதியை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் | எதிர் காலத்தில் வரைபடம் மற்றும் உருதியை தயாரிக்க நடவடிக்கை எடுக்கிறேன் |

(ஊ) 2018 – 3.5.4(இ)

---------------------------

| | | |
|---|---|---|
| சபையின் களஞ்சிய பதிவேட்டு மாதிரி பரிசோதனையின் போது, 03 வருடங்களிற்கும் 05 வருடங்களிற்கும் இடைப்பட்ட காலத்தினுள் விநியோகிக்கப்படாத, ரூபா 200,029 பெறுமதியான 336 அலகு நீர் உதிரிப்பாகங்கள் விளைவற்று நிலவின. | சொத்துக்களை பயன்படுத்த நடவடிக்கை வேண்டும். | எஞ்சியுள்ள பண்டகங்களை கணிப்பீட்டு அறிக்கை பிரகாரம் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |